**MCOP. 176/2024**

**நாள்.29.10.2025**

**ம.சா. 1 – அருளாந்து**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

விபத்து எப்படி நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் நான்தான் தகவல் அறிந்து புகார் கொடுத்தேன். விபத்து நடந்த சாலை உப்பூர் – தொண்டி செல்லும் ஈசிஆர் சாலை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் மகன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றான் என்றால் சரிதான். அரசு பேருந்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றது என்றால் சரிதான். அரசுப்பேருந்து ஓட்டுநர் கவனமாகவும், சாலை விதிகளை கடைபிடித்தும் பேருந்தை இயக்கிக்கொண்டு செல்லும்போது அந்த பேருந்துக்கு எதிராக குறுக்கு சாலை வழியாக என் மகன் இருசக்கர வாகனத்தில் வந்து பேருந்தின் மீது மோதிவிட்டான் என்றால் சரியல்ல. என் மகன் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. என் மகன் குறுக்கு சாலையில் இருந்து மெயின் ரோட்டுக்கு வரும்போது கவனமாக வாகனத்தை ஓட்டி வந்திருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றும், என் மகன் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்ததே விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. அதனால் போக்குவரத்து கழகம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. என் மகன் இறந்த காலகட்டத்தில் நானும், என் மனைவியும் என் மகனின் வருமாணத்தை சார்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 மனுதாரர்கள் என் மகள்கள் என்றும், அவர்களுக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டது என்றும்,விபத்து சமயத்தில் அவர்கள் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்கள் என்றும், என் மகனின் வருமாணத்தை சார்ந்து வாழவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பல்வேறு இனங்களில் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.